# தண்டி போற்றும் தெய்வங்கள்

*ர. திவ்யலட்சுமி*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958631

## *முன்னுரை*

*அணி இலக்கணம் மொழியின் அழகை விளக்குவதோடு அதைப் பயில்வோருக்குத் திறமையாகப் பேசவும், நாகரிக மொழிநடைக்கும் நாகரிகம் அல்லாத மொழிநடைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை அறிய துணை புரிகின்றது. மேலும், வாக்கியங்களில் உள்ள நுட்பமான பொருளை உணரவும் சிறந்த நூல் இயற்றவும் பயன்படுகின்றது. கி.பி.11-ஆம் நூற்றாண்டில் வீரசோழியத்திலும் அதன் உரையிலும் அணியிலக்கண சிந்தனைகள் இயற்றப்பட்டிருப்பினும், அணி இலக்கணத்தைத் தனியே விளக்குதல் எனும் மரபு கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தண்டியலங்காரத்திலிருந்தே தொடங்குகிறது. தண்டியலங்காரம் போன்றே மாறனலங்காரம், சந்திரா லோகம், குவலயாநந்தம் முதலான நூல்கள் அணியிலக்கணத்தைத் தனியே விளக்கியுள்ளன. அணியிலக்கணங்கள் பெரும்பாலும் அகப்புற இலக்கியங்களை உதாரணங்களாகப் பெற்று இயற்றப்பட்டு வந்துள்ளன. சில அணி இலக்கணங்கள் பக்திநெறி சார்ந்த கருத்துக்களையும் ஆங்காங்கே தொட்டுச் சென்றுள்ளன. அவ்வகையில் தண்டியலங்காரத்தின் நூலாசிரியர் தாமே இயற்றிய பாடல்களை மேற்கோள்கள்களாக இணைத்துள்ளார். இந்நூலில் காணலாகும் மேற்கோள் பாடல்களில் தெய்வங்களும் அவை சார்ந்த தொன்மங்களும் இடம்பெற்றுள்ளன. தண்டியாசிரியர் காலத்து பக்தி நிலையை வெளிப்படுத்தும் இப்பாடல்களை ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

## *தண்டியலங்காரத்தின் நூலமைப்பு*

*அணியிலக்கணத்தை மட்டும் கூறும் வகையில் தோன்றிய முதல் நூல் தண்டியலங்காரம். இந்நூலானது பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என முப்பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. பொருளணிகள் 35, சொல்லணிகளுள் மடக்கு, சித்திரக்கவிகளை 20 வகைகளாக விரித்துக் கூறுகின்றது. இறுதியில் வழுவையும் மலைவையும் விவரித்துள்ளது. தண்டியலங்கார உதாரணச் செய்யுள்கள் மிக ஆழமானவை. அவற்றில் பல பாடல்கள் தெய்வங்களின் புகழைப் போற்றும்படியாக அமைந்துள்ளன. மேலும் கலைமகள், சிவன், பிரம்மன், திருமால், இந்திரன், விநாயகர், முருகன், சண்டிகேசுவரர் போன்ற தெய்வங்களின் தோற்ற அமைப்பும், பெருமையும், சிறப்பும், தொன்மையும் நயம்பட எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*

**கலைமகள்**

தண்டியில் இடம்பெற்றுள்ள தெய்வங்களில் முதலாவதாகத் திகழ்பவர் கல்விக் கடவுளாகப் போற்றப்படக் கூடிய கலைமகள் ஆவார்.

**"பல்லுயிர் நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணி"**

***(கந்த.பு,கட.வா.30)***

அனைத்து உயிர்களின் நாவினிலும் கலைமகள் வீற்றிருக்கிறாள் என்கிறது கந்தபுராணம். கலை மகளே நாற்பத்தி ஒன்பது புலவர்களாக தமிழ்ச்ச ங்கத்தில் வீற்றிருந்தாள் என்று திருவிளையாடல் புராணம் கூறுகின்றது. தண்டியும் கலைமகளை,

**"சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி**
**சிந்தைவைத் தியம்புவல் செய்யுட் கணியே"**

***(தண்டி.பக்.1)***

என்று தற்சிறப்புப் பாயிரத்தில் வாழ்த்தியே தம் நூலைத் தொடங்குகிறார். மேலும் பொருளணியின் தொடக்கத்திலும் கலைமகளுக்குத் துதியொன்றை அமைத்துள்ளார். செய்யுளைப் பொருள் கொள்ளும் வகையிலுள்ள இரண்டு நெறிகளில் ஒன்றான கௌடநெறியின் குணவலங்காரங்களைப் பற்றி விவரிக்கும் இடத்தில்,

***"கலைமடந்தை நாவலோர் கண்"***

***(தண்டி.பக்.20)***

வலியவர்களுக்குக் கண்ணாக இருப்பவள் என்று செவிக்கு இனிமையைத் தருகின்ற மெல்லிய இசையான ஒழுகிசைக்குச் சான்றாகக் கல்வியின் சிறப்புக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிவபெருமான்**

தம் நூலின் சான்றுகளில் நாற்பதிற்கும் மேற்பட்ட இடங்களில் சிவபெருமானைப் பற்றியப் புகழுரைகளைக் கூறுகின்றார். உதாரணமாகத் தன்மையணியின் வகைகளான பொருட்டன்மை, குணத்தன்மை, சாதித்தன்மை, தொழிற்றன்மை முதலியவற்றின் சான்றுகளில் சிவபெருமானின் பல்வேறு தன்மைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**"நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடியன்**
**நூலணிந்த மார்ப னுதல்விழியன் - தோலுடையன்"**

***(தண்டி.பக்.35)***

எனத் தொடங்கும் பாடலில் நீலமணிமிடற்றன் சடைமுடியன், முப்புரி நூலணிந்த மார்பன், கைம்மான் மறியன், கனல் மழுவன் என்று சிவனிடத்துள்ள பலவிதமான தன்மைகளைக் குறிப்பிட்டுள்ளார். இச்செய்யுள் சிவனிடத்துள்ள பல்வேறு தன்மைகளை மாறாமல் இயல்பாக உரைக்கும் வகையில் பொருட்டன்மைக்குச் சான்றாகக் கூறப்பட்டுள்ளது. இதேபோன்று ஏதுவுவமையணியை விளக்கும் சான்று பாடலில் சிவனின் சடை முடிமேல் உள்ள அரவின் செம்மையான மணியும், மதியின் வெண்மையும், வன்னி இலையின் பசுமையும் வானவில்லின் நிறத்திற்கு ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளது. ஏது என்பது காரணம். இன்ன காரணத்தால் இதனை இது ஒக்கும் என்ற வகையில் சிவபெருமானின் சடைக்கு வானவில் உவமையாகக் காட்டப்பட்டு உள்ளது.

**"இரவொடு நிற்பித்த தெம்மை - அரவொடு**
**மோட்டாமை புண்ட முதல்வனை முன்வணங்க**
**மாட்டாமை புண்ட மனம்"**

***(தண்டி.பக்.134)***

முதல்வனான சிவபெருமான் பாம்பினையும் ஆமையோட்டினையும் அணிகலனாக அணிந்து உள்ளமையைக் கூறும் இப்பாடலடிகள்,

**"அக்கு அரவு ஆமை ஏனமருப்போடு"**

***(பா.எண்.4)***

என்னும் திருஞானசம்பந்தரின் 3-ஆம் திருமுறையின் 59-ஆவது திருப்பதிகத்தின் பாடலடிகளோடு ஒத்துள்ளதைக் காண முடிகிறது. புலவன் பொருளின் தன்மையை உலக இயல்பிற்குச் சற்று மாறாக அமைக்கும் பொருள் அதிசயவணியைக் கூறுமிடத்தில்,

**"பண்டு புரமெரித்த தீமேற் படர்ந்தின்றும்**
**அண்ட முகடு நெருப்பாறா(து)"**

***(தண்டி.பக்.125)***

சிவனால் முப்புரம் எரிக்கப்பட்டபோது பற்றிய தீயானது அணையாமல் இன்றும் இடியாக இடித்துக் கொண்டிருப்பதை இவ்வுலகம் அதிசயிப்பதாக விவரிக்கின்றார். முப்புரம் எரித்த தீ இங்கு பொருளதிசயமாக அமைந்துள்ளது.

**நான்முகனும் சண்டிகேசுவரனும்**

படைக்கும் கடவுளான நான்முகனையும், சிவபெருமானின் உணவு மற்றும்

உடைமைகளுக்கு அதிபதியாக விளங்கும் சண்டீசரையும் பற்றிய இச்செய்யுளில்,

**"தலையிழந்தா னெவ்வுயிருந் தந்தான்**
**பிதாவைக் கொலைபுரிந்தான் குற்றங் கடிந்தான்"**
***(தண்டி.பக்.111)***

உயிர்களுக்காகப் படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மன் தலையை இழந்தான். தந்தையைக் கொன்ற சண்டீசன் குற்றம் நீங்கினான். உயர்ந்தோர் தவறு செய்யினும் தவறாகா என்பது ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. இதனுள் நல்வினைப் பயன் தீயதாகவும் தீவினை பயன் நன்மையாகவும் வந்துள்ளமை விபரீதமாகும். இத்தொன்மங்கள் வேற்றுப்பொருள் வைப்பணியின் வகைகளில் ஒன்றான விபரீதப்படுத்தலுக்குச் சான்றாக ஒரே பாடலில் காட்டியுள்ளமைக் குறிப்பிடத்தக்கது. இயற்கைக்கு மாறானவற்றைக் கொண்டு முடிப்பது விபரீதபடுத்தலாகும்.

### விநாயகப் பெருமான்

விநாயகப் பெருமானின் தன்மையையும் சிறப்பையும் தண்டியாசிரியர் இரண்டு செய்யுள்களில் விவரித்துள்ளார். ஒன்றுக் கொன்று பொருத்தமற்ற பொருள்களை உருவகப்படுத்தும் இயைபிலுருவகத்திற்குச் சான்றாக,

**"தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்ச**
**டையே கூனற் பவளக் கொடியாகத் - தான"**
***(தண்டி.பக்.64)***

என்ற பாடலடிகளில் விநாயகப் பெருமான் அணிந்திருந்த கொன்றை மலருக்குப் பொன்னும், திருச்சடைக்குப் பவளக் கொடியும், மதநீருக்கு மழையும், தந்தத்திற்கு மதியும் ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வொப்புமைகள் ஒன்றுக் கொன்று இயைவு அற்றவை. மற்றொரு செய்யுளில் விநாயகப் பெருமானை வழிபடுவதால் விளையும் பயனை எடுத்துரைக்கிறார். இதனை,

**"தானவரை யென்றுந் தலையழித்தான் - யானைமுகன்**
**ஓட்டினான் வெங்கலியை யுள்ளத் தினிதமர்ந்து"**
***(தண்டி.பக்.86)***

என்ற பாடலில், எப்போதும் அசுரர்களை அழிப்பவன், கொடிய வறுமையையும் நீக்குபவன், நம் உள்ளத்திலிருந்து நம்மீதுள்ள வினைப் பகையை அறுப்பவன் என்ற விநாயகப் பெருமானின் சிறப்புகள் அமைந்துள்ளன. செய்யுளில் இடையே நிற்கும் சொல் பிறவற்றோடு இணைந்து பொருள் தருவது இடைநிலைப் பொருள் தீவகவணி. இங்கு யானைமுகன் என்ற சொல் அழித்தான், ஓட்டினான், வீட்டினான் என்பவற்றோடு இணைந்து பொருள்படுவதால் இப்பாடல் இடைநிலைப் பொருள் தீவகவணிக்குச் சான்றாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### முருகன்

குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனின் சிறப்புகளும் தண்டியில் இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

**"முருகவேள் சூர்மா முதறடிந்தான் வள்ளி**
**புரிக்குழன்மேன் மாலை புனைந்தான்"**
***(தண்டி.பக்.84)***

என்ற செய்யுளில் மாமரமாகிய சூரபதுமனை அழித்தது, வள்ளியின் கூந்தலில் மாலைப் புனைந்தது, தேவர்களுக்கு அடைக்கலமளித்து அவர்களின் சேனைகளைக் காத்தது, தன் வேலினால் உயர்ந்த கிரவுஞ்ச மலையைப் பிழந்தது ஆகிய சிறப்புகள் முதனிலைப் பொருள்தீவக அணியின் சான்று பாடலில் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது. முதலிலுள்ள முருகவேள் என்ற சொல்தடிந்தான், புனைந்தான் முதலியவற்றோடு இணைந்து பொருளைப் புலப்படுத்தியுள்ளது.

### இந்திரன்

மருத நிலத் தெய்வமாக விளங்கக்கூடிய இந்திரனின் தன்மையைப் பற்றி ஒப்புமைக் கூட்டவுவமைக்கான உதாரணத்தில் குறிப்பிடுகின்றார். ஒப்புமையுடைய இரு பொருள்களைக் கூட்டி ஒப்புமை உரைப்பது. இதனை,

**"விண்ணின்மேற் காவல் புரிந்துறங்கான் விண்ணவர்கோன்**
**மண்ணின்மே லன்னை வயவேந்தே"**
***(தண்டி.பக்.56)***

என்ற பாடலில், இந்திரனும் சோழனும் ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளனர். இருவரும்

காவல் தொழிலிலும், பகைமையைக் களைதலிலும் ஒத்தத் தன்மையுடையராகக் காட்டப்பட்டுள்ளமையை அறியமுடிகிறது. இந்திரன்-சோழன், அரக்கர்-பகைவர் என்பன இங்கு உரைக்கப்பட்ட ஒப்புமைகள்.

### திருமால்

தண்டியாசிரியர் திருமாலைப் பதினாறு இடங்களில் குறிப்பிட்டுச் செல்கின்றார். தன் கைகளில் சிவந்த சக்கரத்தையுடையவன் திருமால் என்பதோடு தம் நூலில் இவருடையை பல்வேறு சிறப்புகளைச் சுட்டிக்காட்டுகிறார். தொடரில் பொருளை உணர்த்தும் உருபுகள் தொக்கியும் வெளிபபட்டும் நிற்பது தொகை விரியுருவகமாகும். இதனை,

**“வையந் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காக”**

***(தண்டி.பக்.64)***

என்ற நாலாயிரத் திவ்வியபிரபந்த பாடலைப் பயன்படுத்தியுள்ளார். இவ்வுலகையே அகலமாகவும், பரந்த பெரிய கடலை நெய்யாகவும், வெம்மையான கதிரவனை விளக்காகவும் கொண்டவன் திருமால். தன்னை வழிபடுவோரின் துன்பமாகிய கடலை வற்றிட செய்பவன் என தொகைவிரி உருவக அணிக்கு உதாரணம் உரைக்குமிடத்தில் குறிப்பிடுகிறார். மேலும், திருமால் உலகளந்ததைப் பற்றி,

**“முன்னங் குடைபோன் முடிநா யகமணிபோல்**
**மன்னுந் திலகம்போல் வாளிரவி - பொன்னகலம்”**

***(தண்டி.பக்.91)***

என்னும் செய்யுளில் திருமாலுக்குக் கதிரவனே குடை போன்றும், நாகமணி போன்றும், நெற்றித் திலகம் போன்றும், மார்பில் கௌத்தும மணியாகவும், கொப்புழிலுள்ள பெரிய தாமரை போன்றும் ஒத்திருப்பதாக தொன்மத்தை உவமா தீவகத்திற்குச் சான்றாக எடுத்துரைக்கின்றார். கதிரவன் என்ற தீவகச் சொல் பல்வேறு உவமங்களோடு பொருந்தி வந்துள்ளது. இதே போன்று திருமால் குறித்த பொய்கையார் பாடலொன்றையும் மேற்கோள்காட்டியிருப்பதை அறியமுடிகிறது.

**“பாலன் றனதுருவா யேழுலகுண் டாலிலையின்**
**மேலன்று கண்டுயின்றாய் மெய்யென்பர்”**

***(தண்டி.பக்.95)***

இதில் கண்ணன் சிறுபாலகனாக இருந்தபோது உலகனைத்தையும் உண்டான். பின்பு ஓர் ஆலிலையின் மேல் உறங்கினான் என்று குறிப்பிட்டுள்ளார். உலகனைத்தையும் உண்டானெனின் அந்த இலையை மட்டும் உண்ணாது விட்டானோ? அந்த இலை இருந்த இடம் கடலா? விண்ணா? மண்ணா? என்று வினவி தொன்ம நிகழ்வினை மறுத்துள்ளார். முன்னம்-குறிப்பு. ஒரு பொருளைக் குறிப்பால் மறுத்து (விலக்கி) உயர்வு தோன்ற உரைப்பது முன்னவிலக்கணி. இச்செய்யுள் முன்னவிலக்கணியின் வகைகளுள் ஒன்றான இறந்தகால நிகழ்வினை மறுத்துக் கூறும் இறந்தவினை விலக்கணியில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

### முடிவுரை

தண்டியலங்கார உதாரணச் செய்யுட்களில் பக்திச் செல்வாக்கின் தன்மை மேலோங்கியிருப்பதை அறியமுடிகிறது. பல செய்யுள்களில் தலைவன் தலைவிக்கும், அவர்களின் அணிகலன்களுக்கும் ஒப்புமையாகவும் தெய்வங்களின் அணிகளும், தன்மையும், தொன்மங்களும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இவ்வணி நூல் சோழர்கள் காலத்தில் இயற்றப்பட்டது என்பதால் சோழனின் வீரத்தையும், தன்மையையும், சிறப்பையும் குறிப்பிடுவதாக அமைந்த சான்று பாடல்களிலும் தெய்வங்கள் ஒப்புமையாக்கப்பட்டுள்ளனர். மக்கள் வாழ்வில் பக்தித்திறம் அதிகமிருந்த காலத்தில் இந்நூல் இயற்றப்பெற்றதால் இலக்கணத்தை மக்கள் உள்வாங்கிக் கொள்ள தெய்வங்களையும் அவற்றின் தொன்மங்களையும் ஆசிரியர் மேற்கோள் பாடல்களில் கையாண்டிருக்கலாம் என்றுணர முடிகிறது. இந்நூலில் உதாரணங்களாக 350க்கும் மேற்பட்ட செய்யுள்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 70க்கும் மேற்பட்ட பாடல்கள் தெய்வங்களின் மேல் பாடப்பட்டுள்ளன. இதன் மூலம் தண்டியாசிரியரின் பக்திச் செல்வாக்குத் திறம்பட வெளிப்பட்டிருப்பதைக் கட்டுரை விளக்கியுள்ளது.

**பார்வை நூல்கள்**

1. *தண்டியலங்காரம், கழக வெளியீடு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 21ஆம் பதிப்பு 2004.*
2. *டாக்டர் சுந்தரமூர்த்தி.கு, தண்டியலங்காரம் மூலமும் உரையும், உமா பதிப்பகம், 2ஆம் பதிப்பு 2016.*
3. *வித்துவான் பட்டுச்சாமி ஓதுவார்.தி, கந்தபுராணம் (வசனம்), திருப்பனந்தாள் காசிமடம், பதிப்பு 1953.*
4. *தேவாரப் பதிகங்கள்: மூன்றாம் திருமுறை, ஞானசம்பந்தம் அச்சகம் (தருமபுரம்), பதிப்பு 1955.*